வழக்குரைஞராக பேரறிவாளன் பதிவு: காங்கிரஸ் கண்டனம்; பார் கவுன்சில் விளக்கம்

சென்னை, ஏப். 29: பேரறிவாளன் வழக்குரைஞராகப் பதிவு செய்ததில் எந்த விதிமீறலும் இல்லை என்று பார் கவுன்சில் உறுப்பினரும், வழக்குரைஞர் பதிவுக் குழு தலைவருமான கே.பாலு விளக்கம் அளித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற பேரறிவாளன், சட்டப் படிப்பை முடித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்தார். இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் எம்.பி.யும், வழக்குரைஞருமான ஆர்.சுதா கூறியதாவது:

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி பேரறிவாளன், வழக்குரைஞராகப் பதிவு செய்த நாள் ஒரு கருப்பு நாள். இதற்காக பார் கவுன்சில் உறுப்பினர்களைக் கண்டிக்கிறேன். பேரறிவாளனை வழக்குரைஞராகப் பதிவு செய்ய அனுமதித்தது தவறான முன்னுதாரணம். இது குறித்து குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பி உள்ளேன். எனவே, பேரறிவாளன் வழக்குரைஞர் பதிவை திரும்பப் பெற பார் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இது குறித்து பார் கவுன்சில் உறுப்பினரும், வழக்குரைஞர் பதிவுக் குழு தலைவருமான கே.பாலு அளித்த விளக்கம்:

குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர் வழக்குரைஞராகப் பதிவு செய்வது இது முதல்முறை அல்லை. ஏற்கெனவே, பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்து வழக்குரைஞராக பலர் பணியாற்றுகின்றனர்.

வழக்குரைஞர்கள் சட்டப் பிரிவுகளின் படி, ஒருவர் குற்றவாளியாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு அதற்குரிய தண்டனையை அனுபவித்து முடித்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழக்குரைஞராகப் பதிவு செய்யலாம் எனக் கூறுகிறது. பேரறிவாளனின் ஆவணங்கள் பார் கவுன்சிலின் வழக்குரைஞர் பதிவுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அதன் பிறகே வழக்குரைஞராகப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டார். இதில் எந்த சட்ட விதிமீறலும் இல்லை என்று கூறினார்.

கொடைக்கானலில் ஓய்வெடுத்த முதல்வர் ஸ்டாலின் சென்னைக்கு திரும்பினார்

கொடைக்கானல்/திருப்பரங்குன்றம், ஏப். 29: கொடைக்கானலில் 4 நாள்கள் ஓய்வுக்குப் பிறகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை கார் மூலமாக மதுரைக்கு வந்து, அங்கிருந்து தனி விமானத்தில் சென்னைக்கு திரும்பினார்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலுக்கு கடந்த 25-ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தினருடன் ஓய்வெடுப்பதற்காக வந்தார். அவர் கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியிலுள்ள தனியார் நட்சத்திர விடுதியில் தங்கியிருந்தார்.

கடந்த 3 நாள்களாக அவர் கொடைக்கானல் ஏரிச் சாலை, நகராட்சி நீர்த்தேக்கம் உள்ளிட்ட பகுதிகளில் நடைப்பயிற்சியும், ஏரிச் சாலைப் பகுதியில் மிதி வண்டியும் ஓட்டினார். 4 நாள்கள் ஓய்வுக்குப் பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடைக்கானலிலிருந்து காரில் மதுரைக்குப் புறப்பட்டார். அப்போது, தங்கும் விடுதியின் முன் கூடியிருந்த பொதுமக்கள் முதல்வருடன் புகைப்படம் எடுத்தனர்.

இதையடுத்து, கொடைக்கானல் - வத்தலக்குண்டு மலைச் சாலையில் சென்றபோது மூஞ்சிக்கல், உகார்த்தே நகர், செண்பகனூர், பெருமாள்மலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களிடமிருந்து முதல்வர் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

கொடைக்கானலிலிருந்து காரில் புதன்கிழமை மதுரைக்குச் சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

பின்னர், அவர் நண்பகல் 12.50 மணிக்கு மதுரைக்கு வந்தார். இதைத்தொடர்ந்து, பிற்பகல் ஒரு மணிக்கு தனி விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். முன்னதாக, மதுரை விமான நிலையத்தில் அவருக்கு மீண்டும் திமுக ஆட்சி 2.0 தொடர வேண்டும் என்ற கேடயத்தையும், அசோக முத்திரையையும் கட்சியினர் பரிசாக வழங்கினர்.

கூடங்குளம் முதலாவது அணு உலையில் மீண்டும் மின் உற்பத்தி தொடக்கம்

வள்ளியூர், ஏப். 29: திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் முதலாவது அணு உலையில் மின் உற்பத்தி செவ்வாய்க்கிழமை மீண்டும் தொடங்கியது.

கூடங்குளத்தில் ரஷிய நாட்டு தொழில்நுட்பத்துடன் ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட இரு அணு உலைகள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இதில் இருந்து தமிழகத்துக்கு 1,152 மெகாவாட் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், முதலாவது அணு உலையில் கண்டன்சரை குளிர்விக்கும் நீர் இறைப்பானில் ஏற்பட்ட தொழில்நுட்ப பழுது காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதையடுத்து, அணு உலை விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் தொழில்நுட்ப கோளாறை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தொழில்நுட்ப பழுது சீர்செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. தற்போது இரு அணு உலைகள் மூலம் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

பாளை. சிறையில் கைதிகள் மோதல்: இருவர் காயம்

திருநெல்வேலி, ஏப்.29: பாளையங்கோட்டை சிறையில் விசாரணைக் கைதிகள் மோதிக்கொண்டதில் இருவர் காயமடைந்தனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறையில் சுமார் 1,300-க்கும் மேற்பட்ட விசாரணை மற்றும் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்தில் செவ்வாய்க்கிழமை இரவு தூங்கும் இடம் தொடர்பாக கைதிகளுக்கிடையே பிரச்னை ஏற்பட்டதாம்.

பின்னர், புதன்கிழமை மாலையில் மீண்டும் ஏற்பட்ட தகராறில் இருதரப்பாக பிரிந்து ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனராம். இதில் 2 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுகுறித்து சிறை அதிகாரி அளித்த புகாரின்பேரில், பெருமாள்புரம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

வெளிநாடு தப்பிச் செல்ல முயன்ற ஆம்ஸ்ட்ராங் வழக்கு எதிரி கைது

சென்னை, ஏப். 29: பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கின் முக்கிய எதிரியான அஸ்வத்தாமன், பெங்களூருவில் இருந்து வெளிநாடு தப்பிச் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங், சென்னை பெரம்பூரில் 5.7.2024-இல் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் ரௌடி நாகேந்திரன், அவரது மகன் அஸ்வத்தாமன் உள்பட பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சிலர் அண்மையில் நீதிமன்ற பிணையில் சிறையில் இருந்து வெளியே வந்தனர்.

ஆனால் இவர்கள், வெளிநாடு தப்பிச் செல்லாமல் இருப்பதற்கு சென்னை பெருநகர காவல் துறை பிணையில் வெளியே வந்தவர்களுக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ் வழங்கியது.

இந்த நிலையில், கர்நாடக மாநிலம் பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அஸ்வத்தாமன், பாங்காங்க் செல்ல புதன்கிழமை முயன்றார். இதைப் பார்த்த குடியுரிமைத் துறை அதிகாரிகள், லுக் அவுட் நோட்டீஸ் அடிப்படையில் அஸ்வத்தாமனை பிடித்து, சென்னை பெருநகர காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

சென்னை போலீஸார், அஸ்வத்தாமனை கைது செய்து, சென்னை அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் பாதுகாப்பு தேவை: தவெக

சென்னை, ஏப்.29: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் நாளான மே 4-இல், வாக்கு எண்ணிக்கை மையங்களில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தவெக இணைப் பொதுச்செயலர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், துணை பொதுச்செயலர் ராஜ்மோகன் ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

தொடர்ந்து, சி.டி.ஆர். நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தபால் வாக்குகள் குறித்து முறையான பதிவேடு பின்பற்றப்பட வேண்டும். அனைத்து தபால் வாக்குகளையும் எண்ம (டிஜிட்டல்) முறைபடுத்தப்படுவதோடு, அவை எண்ணப்படுவதை காணொலியாக ஆவணப்படுத்தி முடிவுகள் வெளியான பின்னர் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் கோரிக்கை வைத்தோம்.

மேலும், வாக்கு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணி முடிப்பதற்கு முன்பாகவே, தபால் வாக்குகளை எண்ணி முடிக்க வேண்டும். அதேபோல, வாக்கு எண்ணும் தினத்தில், வாக்கு எண்ணும் மையங்களில் குளறுபடிகள் செய்ய திமுக திட்டமிட்டுள்ளது.

ஆகையால், வாக்கு எண்ணும் மையங்களுக்கு காவல் துறையுடன் மத்திய பாதுகாப்புப் படைகளையும் சேர்த்து பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரினோம். எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் செயல்படுத்தப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி உறுதியளித்தார் என்றார் அவர்.

நாட்டுத் துப்பாக்கி வெடித்து காயமடைந்த பெண் உயிரிழப்பு

ராசிபுரம், ஏப்.29: ராசிபுரம் அருகே நாட்டுத் துப்பாக்கியை சுத்தம் செய்யும்போது வெடி விபத்து ஏற்பட்டு காயமடைந்த பெண் புதன்கிழமை உயிரிழந்தார்.

ராசிபுரம் அருகே உள்ள வெண்ணந்தூர் பழந்தின்னிப் பட்டியைச் சேர்ந்தவர் கண்ணன் (60). இவரது மனைவி செல்வி (50). இவர்களது 17 வயது மகன் கடந்த 25-ஆம் தேதி வீட்டில் வைத்திருந்த நாட்டுத் துப்பாக்கியை சுத்தம் செய்ததாகக் கூறப்படுகிறது. அப்போது, துப்பாக்கி வெடித்து அதிலிருந்து வெளியேறிய பால்ரஸ் குண்டுகள் செல்வியின் தோள்பட்டை, கழுத்து பகுதியில் பாய்ந்தன.

பலத்த காயங்களுடன் ராசிபுரம் தனியார் மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப்பட்ட செல்விக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. பிறகு உயர் சிகிச்சைக்காக சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் மருத்துவமனையில் செல்வி புதன்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்து வெண்ணந்தூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

முக்கால் பவுனுக்காக மூதாட்டி கொலை: இளம்பெண் உள்பட 3 பேர் கைது

கரூர், ஏப்.29: கரூர் அருகே முக்கால் பவுன் நகைக்காக மூதாட்டியை கொன்ற வழக்கில் இளம்பெண் உள்பட 3 பேரை போலீஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

கரூரை அடுத்த உப்பிடமங்கலம் அருகே உள்ள சாலைப்பட்டியைச் சேர்ந்தவர் தாயார் அம்மாள் (79). வீட்டில் தனியாக இருந்த இவர், கடந்த 27 -ஆம் தேதி கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இது தொடர்பாக வெள்ளியணை போலீஸார் வழக்குப் பதிந்து கொலையாளிகளை தேடி வந்தனர். மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.என்.ஹரிகிரண்பிரசாத் உத்தரவின் பேரில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டது. இந்த தனிப்படையினர் நடத்திய விசாரணையில் மூதாட்டி கொலை தொடர்புடைய மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த பாண்டீஸ்வரன் (19) என்பவரை சென்னையில் ரயில்வே பாதுகாப்புப் படை போலீஸார் உதவியுடன் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு போலீஸார் கைது செய்தனர்.

இதையடுத்து அவரிடம் நடத்திய விசாரணையில், திருநெல்வேலி மாவட்டம், களக்காடு பகுதியைச் சேர்ந்த கொம்பையன் (28) என்பவரும், கரூரை அடுத்த உப்பிடமங்கலம் சாலைப்பட்டியைச் சேர்ந்த வனிதா (24) என்பவருக்கும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றுள்ளது. இதையடுத்து கொம்பையனுக்கு களக்காட்டில் போதிய வேலை இல்லாததால் மனைவி ஊரான சாலைப்பட்டியில் தங்கி கூலி வேலை செய்து வந்தாராம். இந்நிலையில் கொம்பையனின் உறவினர்களான களக்காடு பகுதியைச் சேர்ந்த பார்த்தீபன் (24), சதீஷ் (20), மதுரையைச் சேர்ந்த பாண்டீஸ்வரன் ஆகியோர் கொம்பையன் வீட்டுக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.

அப்போது கொம்பையன் வீட்டுக்கு அருகே குடியிருந்த தாயார் அம்மாள் தனியாக இருப்பதும், அவரிடம் மூக்குத்தி உள்ளிட்ட நகைகள் இருப்பதும் தெரியவந்துள்ளது. இதையடுத்து ஏப். 27-ஆம் தேதி நள்ளிரவில் தனியாக இருந்த தாயார் அம்மாள் வீட்டுக்குள் முகமூடி அணிந்த நிலையில் சென்ற கொம்பையன், அவரது மனைவி வனிதா மற்றும் பார்த்தீபன், பாண்டீஸ்வரன், சதீஷ் ஆகியோர் தாயார் அம்மாளின் வாயைப் பொத்தி அவர் படுத்திருந்த கட்டிலோடு கயிற்றால் கட்டியுள்ளனர். பின்னர் அவரது காதில் கிடந்த அரை பவுன் தோடு, கால் பவுன் மூக்குத்தி ஆகியவற்றை பறித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுள்ளனர். பின்னர் சுமார் ஒரு மணி நேரம் கழித்து அவர்கள் வந்து பார்த்தபோது தாயார் அம்மாள் உயிரோடு இருந்துள்ளார். பின்னர் வாயில் துணியை திணித்துவைத்து விட்டு சென்றனர்.

இதையடுத்து மூச்சுத்திணறி தாயார் அம்மாள் உயிரிழந்துள்ளார். மறுநாள் காலை (ஏப்.28) தாயார் அம்மாள் இறந்ததை அறிந்ததும் கொம்பையன், பாண்டீஸ்வரன், சதீஷ், பார்த்தீபன் ஆகியோர் தலைமறைவாகிவிட்டனர். வீட்டில் வனிதா மட்டும் இருந்துள்ளார்.

இதையடுத்து தனிப்படை போலீஸார் பாண்டீஸ்வரனை சென்னையில் கைது செய்ததும், அவர் கூறிய தகவலையடுத்து வனிதா, பார்த்தீபன் ஆகியோரையும் புதன்கிழமை காலை கைது செய்தனர். அவர்கள் 3 பேரையும் கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள கொம்பையன், சதீஷ் ஆகியோரை தேடி வருகின்றனர்.

புளியறை அருகே முதியவர் வெட்டிக்கொலை

தென்காசி, ஏப். 29: தெற்கு மேடு அங்கன்காலடியைச் சேர்ந்தவர் காளி (68). இவர் தோப்பு காவலாளியாக வேலை செய்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த முருகையா மகன் அருண் குமார் (34). இவர் செங்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

அருண்குமாரின் தந்தை முருகையாவை கடந்த 2013 - ஆம் ஆண்டு, குடும்பப் பிரச்னை காரணமாக காளி கொலை செய்தாராம். இது தொடர்பாக புளியறையில் பதிவுச் செய்யப்பட்ட வழக்கின் மீதான விசாரணை முடிவடைந்து, காளிக்கு தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை முடிந்து 2022- ஆம் ஆண்டு காளி வெளியே வந்தார்.

காளி மீது அருண்குமாருக்கு முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் அங்கன்காலடியில் சப்பானி மாடசாமி கோயிலில் நடைபெற்று வரும் கொடை விழாவில் தீர்த்த ஊர்வலம் முடிந்த பிறகு, செவ்வாய்க்கிழமை இரவு கோயிலில் நின்று கொண்டிருந்த காளியை அருண்குமார் அரிவாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றார்.

பலத்த காயமடைந்த காளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியன் வங்கி Indian Bank

மண்டல அலுவலகம் : புதுச்சேரி
66/4, கிழக்கு கடற்கரை சாலை,
பாக்கமுடையான்பேட்டை, புதுச்சேரி–605008.
Ph : 0413-2257139

டெண்டர் அறிவிப்பு (ஆன்லைன் டெண்டர்)

இந்தியன் வங்கியின் **INDSETI** புதிய கட்டடத்திற்கு "V.மருதூர் விழுப்புரம்–605602" என்ற அமைவிடத்தில் தரைத்தளம் + முதல்தளம் **(G+1 INDSETI)** கட்டிடம் கட்டித்தரக்கூடிய மதிப்பு வாய்ந்த ஒப்பந்ததார நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஏலப்புள்ளி முறையில் (தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலப்புள்ளி) இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் (e-டெண்டர்) வரவேற்கப்படுகிறது. டெண்டர் மதிப்பு ரூ.**408.38** லட்சங்கள் மற்றும் GST பொருந்தும். ஆன்லைன் ஏலம் மூலம் டெண்டரை சமர்ப்பிப்பதர்கான கடைசி தேதி மற்றும் நேரம் **25.05.2026, 15:00** மணிவரை. மேலும் விவரங்களுக்கு **https://indianbank.bank.in/tenders/** and **https://www.tenderwizard.com/INDBANK/** ஆகிய எமது இணையதளங்களை பார்வையிடுவீர்.

இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அனைத்து விதமான கூடுதல் அறிவிப்புகள் திருத்தங்கள் அல்லது சேர்க்கைகள் ஏதேனும் இருந்தால் எமது மேற்கண்ட இணையதளத்தில் வெளியிடப்படும். டெண்டர் நடைமுறைகள் நிகழும் காலகட்டத்தில் இந்த இணையதளங்களை தொடர்ந்து பார்வையிடுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மண்டல மேலாளர்

கல்வி, வேலை வாய்ப்பு செய்திகளுக்கு...
www.dinamani.com

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்கண்ட கிளைகளில் 16.05.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும். வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :
கோயம்புத்தூர், பொள்ளாச்சி, 0100970700811381, நீலகிரி, ஊட்டி, 0102520730013033, திருப்பூர், அனுப்பர்பாளையம், 0111470700060257,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

பெயர் மாற்றம்

I, MURUGESAN (Given Name) S/o. RAMASWAMY (Sur Name) பிறந்த தேதி: 25.05.1964, 126/2, பாண்டியன் வீதி, பவானி ரோடு, பெருந்துறை, ஈரோடு என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி MURUGESAN (Given Name) RAMASAMY (Sur Name) தந்தை பெயர் RAMASAMY என்று அழைக்கப்படுகிறேன்.

Murugesan Ramaswamy
Perundurai, 28th April 2026

NAME CHANGE

I, **K R SUBASH BABU**, S/o. K V Ravichandran, residing at No. 271 A, Udaya Nagar, Ganapathy Managar, Ganapathy, Coimbatore - 641006 shall henceforth be known as **K R SUBASH**. I state that **K R SUBASH BABU** and **K R SUBASH** denotes one and the same person.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 6 ஆண்டுகால பிணையப் பத்திரம், தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுகால பிணையப் பத்திரம் மற்றும் தமிழ்நாடு அரசின் 15 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.3000 கோடி** மதிப்பில் **ரூ.1000 கோடி** மதிப்புள்ள **6 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், ரூ.1000 கோடி** மதிப்புள்ள **10 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம்**, மற்றும் **ரூ.1000 கோடி** மதிப்புள்ள **15 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம்** ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/–க்கும் அதன் பின்னர் ரூ.10,000/–ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **மே 5, 2026** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.

2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் இணைப்பு–IIன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.

3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **மே 5, 2026** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.

5. ஏலத்தின் முடிவுகள் **மே 5, 2026** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **மே 6, 2026** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

6. **தமிழ்நாடு அரசின் 6 ஆண்டுகால பிணையப் பத்திரம், 10 ஆண்டுகால பிணையப் பத்திரம் மற்றும் 15 ஆண்டுகால பிணையப் பத்திரம்** ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **நவம்பர் 06** மற்றும் **மே 06** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.

7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.

8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **ஏப்ரல் 29, 2026 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 946(L)/W&M-II/2026, எண். 947(L)/W&M-II/2026** மற்றும் **எண். 948(L)/W&M-II/2026** – ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை-9.

செ.ம.தொ.இ./ 340 /வரைகலை/2026

அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் அரையாண்டு தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்

SEBI (மியூச்சுவல் ஃபண்ட்) விதிமுறைகள், 1996 இன் விதி 59 இன் படி, ஜுன் 27, 2024 தேதியிட்ட செபி முதன்மை சுற்றறிக்கை எண் SEBI/HO/IMD/IMD-PoD-1/P/CIR/2024/90-ஐயும் சேர்த்துப் படிக்கையில், சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் மார்ச் 31, 2026-இல் முடிவடைந்த அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள், சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட் (AMC)-இன் இணையதளமான www.sundarammutual.com-இல் பதிவேற்றப்பட்டுள்ளன என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

அதன்படி, முதலீட்டாளர்கள் AMC-யின் இணையதளத்திலிருந்து முடிவுகளைப் பார்க்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

யூனிட் வைத்திருப்பவர்கள் தங்களின் பான் (PAN), கேஒய்சி (KYC) விவரங்கள், மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண், மற்றும் நாமினி தகவல்களை AMC-யில் புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், தங்களின் பான் எண் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: ஏப்ரல் 30, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

அறிவிப்பு

UNIFI MUTUAL FUND

தணிக்கை செய்யப்படாத அரை ஆண்டு நிதி அறிக்கை வெளியீடு - Unifi பரஸ்பர நிதித் திட்டங்களின் முடிவுகள்

Unifi மியூச்சுவல் ஃபண்டின் ("ஃபண்ட்") திட்டங்களின் முதலீட்டாளர்(கள்) / யூனிட் ஹோல்டர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (மியூச்சுவல் ஃபண்ட்ஸ்) ஒழுங்குமுறைகள், 1996-இன் ஒழுங்குமுறை 59-இன் படியும், ஜூன் 27, 2024 தேதியிட்ட செபி மாஸ்டர் சுற்றறிக்கை எண். SEBI/HO/IMD/IMD-PoD-1/P/CIR/2024/90-இன் பத்தி 5.3-ஐயும் சேர்த்துப் படிக்கையில், மார்ச் 31, 2026-இல் முடிவடைந்த அரையாண்டிற்கான ஃபண்டின் திட்டங்களின் அரையாண்டு தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள், ஃபண்டின் இணையதளமான www.unifimf.com-இல் பதிவேற்றப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் நிதித் திட்டத்தின் முடிவுகளை வலைத்தளத்திலிருந்து பார்க்கலாம்/பதிவிறக்கம் செய்யலாம்.

Unifi அசெட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்க்காக,
(Unifi மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்

இடம்: சென்னை
தேதி: ஏப்ரல் 30, 2026

For more information please contact:
Unifi Asset Management Private Limited
(Investment Manager for Unifi Mutual Fund)
CIN: U66309TN2024PTC166661

Regd. Office: 11, Kakani Towers, 15, Khader Nawaz Khan Road, Nungambakkam, Chennai – 600006
Toll Free No.: 1800-309-2833
E-mail: services@unifimf.com
Website: www.unifimf.com

Mutual Fund Investments are subject to market risks, read all scheme related documents carefully.

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் சொத்துக்கள் அமலாக்க சட்டப் பிரிவு 13(2)ன் படி 24-03-2026 அன்று கீழ்க்கண்டவர்களுக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட கேட்பு அறிவிப்பு, உங்கள் அனைவராலும் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்டது. ஆகையினால் இந்த கேட்பு அறிவிப்பு பிரசுரிக்கப்படுகிறது.

(1) M/s. Reliable டெக்ஸ்டைல்ஸ் (பிரதிநிதித்துவம், அதனுடைய உரிமையாளர் லேட் D. அருண் குமார்), எண்.73, ஸ்ரீ மகாலட்சுமி நகர், S.M. நகர், NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022. (2) திருமதி சந்தியா .A, க/பெ. லேட் D. அருண் குமார் (லேட் D. அருண் குமாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), எண்.73, ஸ்ரீ மகாலட்சுமிபுரம், S.M. நகர், கோயம்புத்தூர் வடக்கு, NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022. (3) மைனர் அனுஷ்கா .A, (பிரதிநிதித்துவம், இயற்கை பாதுகாவலர் : திருமதி சந்தியா .A), த/பெ. லேட் D. அருண் குமார் (லேட் D. அருண் குமாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), எண்.73, ஸ்ரீ மகாலட்சுமிபுரம், S.M. நகர், கோயம்புத்தூர் வடக்கு, NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022. (4) மைனர் அனன்யா .A, (பிரதிநிதித்துவம், இயற்கை பாதுகாவலர் : திருமதி சந்தியா .A), த/பெ. லேட் D. அருண் குமார் (லேட் D. அருண் குமாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), எண்.73, ஸ்ரீ மகாலட்சுமிபுரம், S.M. நகர், கோயம்புத்தூர் வடக்கு, NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022. (5) லேட் D. அருண் குமார், த/பெ. திவ்யநாதன் (லேட் D. அருண் குமாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்), எண்.73, ஸ்ரீ மகாலட்சுமிபுரம், S.M. நகர், கோயம்புத்தூர் வடக்கு, NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022. (6) லேட் D. அருண் குமார், தா/பெ. திருமதி மோரி சுசீலா, (மேலும் லேட் D. அருண் குமாரின் சட்டபூர்வ வாரிசுதாரர்), எண். 73, ஸ்ரீ மகாலட்சுமிபுரம், S.M. நகர், கோவை வடக்கு, NGGO காலனி, கோவை - 641022.

பொருள் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், துடியலூர் கிளையில் M/s. Reliable டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் உள்ள கடன்/ஓவர்டிராஃப்ட் தொடர்பாக.

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் சொத்துக்கள் அமலாக்க சட்டத்தின்படி **24-03-2026** அன்றுள்ளவாறு Loan Account 512020010033249க்கு **ரூ. 18,42,899/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்)**; உங்களில் எண். 1, பிரதிநிதித்துவம் மற்றும் அதன் உரிமையாளரான லேட் D. அருண்குமார் மற்றும் லேட் D. அருண்குமாரின், சட்டப்பூர்வ வாரிசுதாரர்களாகவும், மற்றும் பிரதிநிதிபடுத்தப்படுகிறவர்கள். உங்களில் எண்கள் : 2, 3, 4, 5 & 6 கொண்டோர், கூட்டாகவும் தனித்தனியாகவும் திருப்பிச் செலுத்தும் படியும் மேலும் **23-03-2026**லிருந்து 512020010033249-க்கு **9.70%** வட்டி + அத்தொகையை திருப்பிச்செலுத்தும் தேதி வரையில் கூடுதலாக அபராத வட்டி ஆண்டுக்கு **2%** (கூட்டு வட்டி அல்ல); **24-03-2026**லிருந்து மாதாந்திர வட்டியுடன் தாங்கள் திருப்பிச் செலுத்துமாறும் வங்கி தங்களுக்கு கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தது. பதிவு தபாலில் உங்களுக்கு அனுப்பப்பட்ட மேற்படி கேட்பு அறிவிப்பு. **உங்கள் அனைவராலும் பெற்றுக் கொள்ளப்படாமல் திரும்பவந்துவிட்டது.**

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள தங்களது கடன் பாக்கித் தொகை Loan Account 512020010033249க்கு **ரூ. 18,42,899/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்)**; உங்களில் எண். 1, பிரதிநிதித்துவம் மற்றும் அதன் உரிமையாளரான லேட் D. அருண்குமார் மற்றும் லேட் D. அருண்குமாரின், சட்டப்பூர்வ வாரிசுதாரர்களாகவும், மற்றும் பிரதிநிதிபடுத்தப்படுகிறவர்கள். உங்களில் எண்கள் : 2, 3, 4, 5 & 6 கொண்டோர், கூட்டாகவும் தனித்தனியாகவும் திருப்பிச் செலுத்தும் படியும் மேலும் 512020010033249-க்கு **9.70%** வட்டி + அத்தொகையை திருப்பிச்செலுத்தும் தேதி வரையில் கூடுதலாக அபராத வட்டி ஆண்டுக்கு **2%** (கூட்டு வட்டி அல்ல); **24-03-2026**லிருந்து **60** நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும் பட்சத்தில், வங்கிக்கு உள்ள உரிமையின்படி, கீழே ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். வங்கிக்குள்ள உரிமைகளின்படி இதர பரிகாரங்களுக்கு குந்தகமின்றி இவ்வறிவிப்பு வெளியிடப்படுகிறது.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
ஷெட்யூல் - A : (லேட் D. அருண் குமார்-க்கு சொந்தமான சொத்து)
(தற்போது பிரதிநிதித்துவம் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் : திருமதி சந்தியா .A, மைனர் அனுஷ்கா .A, மைனர் அனன்யா .A, திரு. திவ்யநாதன் மற்றும் திருமதி மோரி சுசீலா)

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, குருடம்பாளையம் கிராமம், பட்டா எண்.1501-ல், சர்வே எண். 233/2B-ல் பரப்பளவு 1.50 புஞ்சை ஏக்கர் (மதிப்பு ரூ. 2.06), சர்வே எண்.233/4-ல் பரப்பளவு 1.04 புஞ்சை ஏக்கர் (மதிப்பு ரூ. 1.42), சர்வே எண்.233/7B-ல் பரப்பளவு 1.30 புஞ்சை ஏக்கர் (மதிப்பு ரூ. 1.77) மொத்தப் பரப்பளவு 3.84 புஞ்சை ஏக்கர் (மொத்த மதிப்பு ரூ. 5.25) கொண்ட நிலம், ஸ்ரீ மகாலட்சுமிபுரம் எனும் பெயரில் லே-அவுட் மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலத்தின் அனைத்து துண்டுகளும் மற்றும் பாகங்களும் கொண்டது, மற்றும் எதிர்காலத்தில் இனி கட்டப்படவிருக்கும் சூப்பர்ஸ்ட்ரக்சருடன். இதில், மனை எண்.74 பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது : 20 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்கு ரோடுக்கு - வடக்கில்; மனை எண். 73க்கு - கிழக்கில்; மனை எண்.64க்கு - தெற்கில்; மனை எண்.75க்கு - மேற்கில். இதில், கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் - 30 அடி; கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் - 30 அடி; வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் - 54 அடி; வடக்கு-தெற்காக மேற்கு பக்கம் - 52 அடி. மொத்தம் 1,590 சதுர அடி அல்லது 3 சென்ட் 283 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி மனை மற்றும் அதனுடன் கூடிய பாதுகாப்பு நடைபாதை மற்றும் லே-அவுட் ரோடுகள் போன்றவை.

மேற்கூறிய சொத்து சர்வே எண்.233/4 மற்றும் தற்போதைய சர்வே எண்.233/4A1A ஆகியவற்றில் அமைந்துள்ளது. இந்தச்சொத்து அசோகபுரம் கிராமப் பஞ்சாயத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்ட அசையும் பொருட்களின் விவரம்
ஷெட்யூல் - B

M/s. Reliable டெக்ஸ்டைல்ஸ், எண்.73, ஸ்ரீ மகாலட்சுமி நகர், S.M. நகர், NGGO காலனி, கோயம்புத்தூர் - 641022 என்ற முகவரியில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள அனைத்து சரக்குகள் மற்றும் பொருட்கள்.

இடம் : கும்பகோணம், தேதி : 30-04-2026 **அதிகாரபூர்வ அதிகாரி**

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, **CIN** - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, **ஃபேக்ஸ் :** 0435-2431746, **இணையதளம் :** www.cityunionbank.com